செய்தி வெளியீடு எண்: 182 நாள்: 16.03.2013

# தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் கலையாசிரியர்கள் / திட்ட அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் 5 முதல் 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு சென்னையில் 16 வகையான கலைகளிலும், மாவட்டங்களில் 4 வகையான கலைகளிலும் என மொத்தம் 20 வகையான கலைகளில் தமிழகம் முழுவதும் கலைப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சவகர் சிறுவர் மன்றங்களில், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் ஊதிய உயர்வு இல்லாமல் பணியாற்றி வந்த கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு அரசாணை(நிலை) எண்.22, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, நாள்.5.2.2013 வாயிலாக தொகுப்பூதியம் உயர்த்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். உயர்த்தப்பட்ட ஊதியத்தினை வழங்கிட கூடுதல் நிதி ரூ.26,28,000/– அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சென்னை சவகர் சிறுவர் மன்ற கலையாசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/–ஆகவும், மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள் / விரிவாக்க மைய கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு ரூ.300/–லிருந்து ரூ.1,500/–ஆக ஐந்து மடங்கு உயர்த்தியும், ஊரக மைய ஆசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு ரூ.150/–லிருந்து ரூ.1,000/–ஆக ஆறு மடங்காகவும் உயர்த்தியும் மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார்கள். இதன் வாயிலாக சென்னையில் 34 கலையாசிரியர்கள், 4 ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்டங்களில் 136 கலையாசிரியர்கள், 35 திட்ட அலுவலர்கள் என மொத்தம் 209 கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**